[2006 ஆகஸ்ட் 24

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத்திற்குட்பட்ட செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் மாணவ மாணவிகள் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதுவதற்கு அருகில் இருக்கின்ற ராதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் சென்று தேர்வு எழுதுகிறார்கள். இந்த ஆண்டு, செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியர், அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் திரு. விஜயன்மூலம் ஒரு முன்மொழிவையும் நம்முடைய தேர்வுத் துறை இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்கள். செட்டிகுளத்தில் 120 மாணவ, மாணவிகள் 12 ஆம் வகுப்பு படித்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு, செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியிலேயே தேர்வு மையம் அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய முறையான முன்மொழிவுகள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருடைய பரிந்துரையோடு அரசுக்கு வந்திருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலித்து, ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

அங்கன்வாடி கட்டடம்

***1401—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, வடகரைத்தாழனூர் மதுரா கடகால் கிராமத்திற்குப் புதியதாக அங்கன்வாடி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2006 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, வடகரைத்தாழனூர் மதுரா கடகால் கிராமத்திற்குப் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தரக் கோரி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு உரிய விண்ணப்பம், சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டடம் கட்டித் தரக் கோரி, திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களிடமும் கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அதேபோன்று முகையூர் தொகுதியிலே 9 அங்கன்வாடி கட்டடங்கள் இருந்தும், அந்த அங்கன்வாடி கட்டடங்களிலே மின்சார வசதி இல்லாததால், அங்குள்ள பிஞ்சுக் குழந்தைகள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, அந்தக் கட்டடங்களுக்கு மின்சாரம தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கை பதிலுரையில் கூறியுள்ளேன். வருகின்ற நாட்களில் கண்டிப்பாக அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் தண்ணீர் வசதி, மேலும் மின்சார வசதி செய்து தருவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். அதற்குப் பரிசீலனைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகள், சின்ன குழந்தைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சிறிய நாற்காலியும், அவர்கள் சரியாகத் தூங்குவதற்குப் பாய் போன்றவையும், மின் விசிறியும் அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தும் பரிசீலனையில் உள்ளன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவை கண்டிப்பாக மிகவும் அவசரம் என்றால், அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில்--M.L.A. fund-இல் இருந்து எடுத்து உபயோகித்து, விரைவில் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

கால்நடை மருத்துவமனை

***790—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்ப்பனந்தல் கிராமம் என்பது, சுற்றிலும் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட மிகப் பெரிய கிராமங்கள் அடங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே பல்வேறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் பால் குளிரூட்டும் நிலையம் போன்றவை எல்லாம் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்நடைகள் நோயுற்றால், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வானாபுரத்திற்கும் அல்லது 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சங்கராபுரத்திற்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.